உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# தேவனே நியாயாதிபதி



Compiled by
P. Isaac Chandran

தேவன் நீதியுள்ள நியாயாதிபதி,
சங்கீதம் 7:11

கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன். கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர்.

கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர்,அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர்.
நாகூம் 1:2

நியாயம் நீதியினிடமாகத் திரும்பும், செம்மையான இருதயத்தார் யாவரும் அதைப் பின்பற்றுவார்கள்.
சங்கீதம் 94:15

கர்த்தர் ஜனங்களுக்கு நியாயஞ் செய்வார், கர்த்தாவே, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும்.
சங்கீதம் 7:8

சிறுமையானவனின் வழக்கையும், எளியவர்களின் நியாயத்தையும் கர்த்தர் விசாரிப்பாரென்று அறிவேன்.

நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள், செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம்பண்ணுவார்கள்.
சங்கீதம் 140:12,13

வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும், தேவனே நியாயாதிபதி.
சங்கீதம் 50:6

நீர் என் நியாயத்தையும் என் வழக்கையும் தீர்த்து, நீதியுள்ள நியாயாதிபதியாய்ச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறீர்.
சங்கீதம் 9:4

தேவனே நியாயாதிபதி, ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.
சங்கீதம் 75:7

நான் உமக்கு விரோதமாய்க் குற்றம்செய்யவில்லை. நீர் எனக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறதினால், நீர்தான் எனக்கு அநியாயம் செய்கிறீர்.

நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயம் தீர்க்கக்கடவர்
நியாயாதிபதிகள் 11:27

என் குமாரரே, வேண்டாம். நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல. கர்த்தருடைய ஜனங்கள் மீறி நடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்களே.

மனுஷருக்கு விரோதமாக மனுஷன் பாவஞ் செய்தால் நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள். ஒருவன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்வானாகில், அவனுக்காக விண்ணப்பஞ் செய்யத்தக்கவன் யார் என்றான்.

அவர்களோ தங்கள் தகப்பன் சொல்லைக் கேளாமற்போனார்கள். அவர்களைச் சங்கரிக்கக் கர்த்தர் சித்தமாயிருந்தார்.
1 சாமுவேல் 2:24,25

கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்.
ஏசாயா 33:22

சேனைகளின் கர்த்தாவே, உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதியே, நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைப் பார்ப்பேனாக, என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன்
எரேமியா 11:20

இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.
2 தீமோத்தேயு 4:8

அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்.
அப்போஸ்தலர் 10:42

ஆம்! உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயதிபதியாகிய இயேசு கிறிஸ்துவை ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக நம்மை ஒப்புக்கொடுப்போம். கர்த்தரின் நாளிலே நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வோம்.

*******************